பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka
வலம்புரி
VALAMPURI
சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 04 திங்கட்கிழமை (18-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 189

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண

# புலிகள் மீதான தடையை நீக்கி

# அரசு அவர்களுடன் பேசவேண்டும்!

## ஐ. தே. சட்சி எம்.பி டிரோன் பெர்னாண்டோ கோரிக்கை

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வசதியாக புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஏதுவாக தமிழீழவிடுதலைப்புலிகளின் தடையை அரசு நீக்கவேண்டுமென்று செய்தியாளர் பத்தியில் பேசும்போது ஐக்கிய தேசியக் கட்சி எம்பியான டிரோன் பெர்ணான்டோ கூறியுள்ளார்.

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இனமோதலை முடிவிற்கு கொண்டு வருவதற்கும், விடுதலைப்புலிகளுடன் சமாதான

(8ம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் எழுச்சி ஜேர்மனியில் அனுஷ்டிப்பு

(ஜேர்மனி)

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் முன்னெடுத்துச்செல்லப்பட்ட பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வு, சர்வதேசரீதியில் தமிழ்மக்கள்வாழும்இடங்களில் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

இதன் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் ஜேர்மனியில் பொங்குதமிழ் நிகழ்ச்சி அங்கு வாழுகின்ற தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

ஜேர்மனிஸ்கொக்காட் மாநிலத்தில்நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் பெருந்திரளான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## புலிகளின்உளவாளிகள்பட்டியலில் டாக்டர் ஜயலத்;சிவராம் பெயர்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவாளியெனக்கூறும் சில முக்கியஸ்தர்களின்பெயர்களை தமிழ் நெற் வெளியிட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல்வெளியிட்டுள்ளது.

அரசு சார்பான அப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் புலிகளின் உளவாளிகளா ஐக்கியதேசியக்கட்சியின் எம். பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, டி. சிவராம் (தாரகி) ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் வசந்த ராஜா உட்பட பலரின்பெயர்கள் இடம் பெற்றுள்ளது.

இதனை மறுத்த டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வெப்தளத்திற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இம் மறுப்புக் கடிதத்திற்கு வெப்தளப் பொறுப்பாளர் ரண்டில் ரணல் அனுப்பி வைத்துள்ளபதிலில் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் புலிகளின் உளவாளிகள், அல்லது நெருக்கமானவர்கள் அல்லது புலிகளின் ஆதரவாளர்களாகக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

பட்டியலில் கூறப்பட்டுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய தூதராக ஜானக பெரேரா நியமனம் மன்னிப்புசபை கண்டனம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத்தூதுவராக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்பட்டதை சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியா, ஆசிய தமிழர் சங்கங்களின் கூட்டமைப்பும் ஜானக பெரேராவின் நியமனத்தை எதிர்த்துள்ளது.

இலங்கைத் தமிழ் மக்கள் கைதாகுதல் காணாமல் போகுதல்வரை பல மனித உரிமை மீறல் சம்பவங்களில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஜானக பெரேராவை அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமிக்க வேண்டாமென அந்தக் கூட்டமைப்பின் தலைவர் ரவிச்சந்திரன் சர்வதேச மனித நேய அமைப்புக்களிடம் கோரிவருகின்றார். (ந-8)

## பிரதம நீதியரசருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### ஜே. வி. பி. நடத்தும்

(கொழும்பு)

இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராக சர்வதேச ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடமக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்திருப்பதாகஅதன் செயலாளரும் கொழும்பு எம். பியுமானவிமல் வீரவன்சதெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான சபாநாயகரின் தீர்ப்புவெளியானதும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அது தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகிறது.

பிரதம நீதியரசரின் நியமனத்தைக் கடுமையாக ஜே. வி. பி. எதிர்க்குமெனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (வ)

## எரிக்சோலின்சமாதான முயற்சி தொடருமா?

# நோர்வேயின் வெளியுறவுக்குழு அடுத்தவாரம் கூடி முடிவெடுக்கும்

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்மின் சமாதானப் பணிகள் தொடருமா என்பது பற்றி நோர்வேயின் வெளியுறவுக் குழு அடுத்த வாரம் தீர்மானிக்கவுள்ளது. அத்தீர்மானத்தின் பிரகாரம் அவர் சமாதான முயற்சிகளிலிருந்து தடுத்து வைக்கப்படவோ அல்லது தனது பணிகளை நோர்வே நாட்டின் எல்லைகளுக்குள் மட்டும் ஆற்றும்படி கேட்கப்படவோ கூடும் என தெரியவருகின்றது இதேவேளை சமாதானப்பணிகள் உயர்மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்றும். அரசியற்பதவி வகிக்கும் ஒருவர் அவ்விடத்தை நிரப்ப வேண்டுமென்றும் நோர்வே அரசு தீர்மானித்துள்ளது.

ஆயினும் இன்னும் இரு வாரங்களில் நோர்வேயின் தேர்தல் நடைபெறவிருப்பதால் கட்சிகளின் கவனம் முழுவதும் தேர்தலிலேயே இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படும். (ந

பாராளுமன்றா? உயர் நீதிமன்றா? மேலாண்மை கொண்டது

# சபாநாயகர் அனுராவின் தீர்ப்பு யூன் 19 அல்லது 20 இல் தெரியும்

பாராளுமன்றம் உயர் மேலாண்மை கொண்டதாஉயர் நீதிமன்றம் மேலாண்மை கொண்டதாஎன்னும் அரசமைப்பு நெருக்கடிநிலையை தீர்த்துவைக்கக்கூடிய தனது தீர்ப்பை சபாநாயகர் இம்மாதம் 19ந்திகதிஅல்லது20ம் திகதி பாராளுமன்றத்தில் வெளியிடுவார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமநீதியரசர் சரத்என்சில்வாவுக்கு எதிராகக்குற்றவியல் பிரேரணையொன்றை சபாநாயகரிடம் எதிர்க்கட்சி கையளித்துள்ளது. ஆனால் அதனைக் கையேற்கலாமன்றி அதில்கோரப்பட்டுள்ள விசாரணையை நடத்துவதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவைசபாநாயகர்அமைக்க முடியாது என்றுஉயர்நீதிமன்றம் தடைஉத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்தஉத்தரவை நிராகரித்து பாராளுமன்றத்தின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நீர்கொழும்பில்

## பிரதம நீதியரசருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரதமநீதியரசர் சரத்என். சில்வாவிற்கு எதிரானகுற்றவியல்பிரேரணையைஎதிர்த்து அவரது சொந்தஊரான நீர்கொழும்பில் மறியல்போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம்இடம்பெற்றது.

இம்மறியல்போராட்டத்தில் சிறுவர்முதல், முதியோர்வரை கலந்துகொண்டனர்.

நீதித்துறையில் கைவைக்காதே, பிரதமநீதியரசர் தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டும் போன்ற

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இடம் மாற்றம்

(கோப்பாய்)

நல்லூர் கோட்டத்திலிருந்து இரண்டு அதிபர்கள் கோப்பாய் கோட்டத்திற்கு இடம் மாற்றம் பெற்றுள்ளனர்.

புத்தூர் மெதடிஸ் தமிஷன் அதிபராக இ. யோகேஸ்வரனும், நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்திற்கு செ. சிவநேசனுமே இடமாற்றம் பெற்றுள்ளனர். (க-79)

## சங்கீத பரீட்சை

(கல்வயல்)

வட-இலங்கைச் சங்கீதசபையால் நடத்தப்பட விருந்த அறிமுறைப் பரீட்சை 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை கடந்த 9, 10 ஆம் திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டதும், தவிர்க்க முடியாத காரணத்தால் இப்பரீட்சை நடத்த முடியாது போய்விட்டதாகவும் சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (க-111)

## கொடுப்பனவு வழங்கல்

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான ஜூன் மாதத்திற்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்துள்ளார். [க-41]

# கிராமங்கள் பற்றிய சமூக வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியம்

## நூல் வெளியீட்டில் தெரிவிப்பு

(புலோலி)

கிராமங்கள் பற்றிய சமூக வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்று ஆவணங்கள் மிக இன்றியமையாத சாதனங்களாகும்.

மேற்கண்டவாறு, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா இரகுவரனின் ''ஊரும்வாழ்வும்'' தும்பளைக்கிராம சமூகவியல் ஆவண நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக பௌதீகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி என். சிவயோகன் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பண்டிதர் கே.சச்சிதனாநந்தம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது; தும்பளைக்கிராமத்தின் சோதிடபாரம்பரியத்தைக் குறிப்பாக 1645 ஆம் ஆண்டு தொடக்கம் ஏட்டுப்பிரதியில் பஞ்சாங்கம் வெளியிட்ட வரலாற்றை சிறப்பாக வெளிக் கொண்டு வந்திருக்கிறார் ''ஊரும் வாழ்வும்'' நூல் இரகுவரனின் சிறந்த படைப்பாகும்.

யாழ்: பல்கலைக்கழக பேராசிரியர் ஏ சண்முகதாஸ் வெளியீட்டுரையில் குறிப்பிட்டதாவது; ஊரும் வாழ்வும் நூலில் நூலாசிரியர் இரகுவரன் பரந்துபட்ட ரீதியில் சிறப்பாக வரலாறுகளை ஆவணப்படுத்தியுள்ளார்; தும்பளை தெற்கில் வழக்கத்தில் இருந்த அக்கிராம மக்களுக்கேயான மொழிபற்றி குறிப்பிட்டிருப்பது சிறப்பானதொன்றாகக் காணப்படுகின்றது.

கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

தும்பளைக்கிராமம் பற்றி சில உறுதியான கட்டுரைகள் அவ்வப்போது வெளிவந்தாலும் பல விடயங்களை உள்ளடக்கிய தொகுப்பாக ''ஊரும் வாழ்வும்'' நூல் இருப்பது நாலின் சிறப்பம்சமாகும். பழமொழிகள் கிராமக்குறிச்சிகளின் பெயர்கள் என்பனவும் இடம்பெற்றிருந்தால் இந் நூல் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்;

யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறை விரிவுரையாளர் என் சிவபாலன் மற்றும் வடமாரட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.பி. வேலாயுத பிள்ளை கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக அதிகாரி ஆர்.சிவபுண்ணியம் ஆகியோரும் உரையாற்றினர் நூலாசிரியர் இரகுவரன் பதிலுரை நிகழ்த்தினார். (க-52)

## அமைதிசமாதானம்வேண்டி காத்தான்குடியில் வழிபாடு

(கொழும்பு)

நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைபெறவும் இனங்களிடையே ஐக்கியமும் சகோதரத்துவமும் நிலைபெறவும் காத்தான்குடியில் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனமும் ஜம்மியத்தின் உலமாவும் இணைந்து பிரார்த்தனை ஒன்றை நிகழ்த்தி வருகின்றனர்;

நேற்று ஆரம்பமான இந்தப் பிரார்த்தனை வாரம் எதிர் வரும் 25 ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது. இது தொடர்பாக முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனமும் ஜம்மியத்தில் உலமாவும் பொதுமக்கள் மிகவும் அக்கறையுடன் இதில் பங்கு பற்ற வேண்டும் எனகேட்கப்பட்டுள்ளது. க07

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு பழைய வீதி வீரபத்திரர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மஹோற்சவத்தைத் தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறும். (இ-5

## இல்ல விளையாட்டு போட்டி

(சங்கானை)

சங்கானை விக்கினேஸ்வரா வித்தியாசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம்புதன்கிழமை பி.ப 2 00 மணிக்கு மகாதேவப் பிள்ளையார் கோயில் மேற்கு வீதியில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி ச ஸ்ரீபிரபாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு. வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## காய்ச்சலின் தாக்கம் சிறுமி மரணம்

(மந்திகை)

மூளை மலேரியாக் காய்ச்சலுக்குள்ளான சிறுமி ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்;

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இச் சம்பவத்தில் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து சுப்பர்மடம் முகாமில் வசித்து வந்த சிறீராஜ் சிந்துஜா (வயது 3)என்பவரே மரணமானவராவார். (க-23)


# கேள்வி அறிவித்தல்

**பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) யாழ்ப்பாணம்.**

1. கோப்பாய் வைத்திய அதிகாரி அலுவலக ஆலோசனைக்கூடம் விஸ்தரித்தல் (கட்டடம் 11) வேலைக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2001 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிவரை யாழ்ப்பாணப் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்: பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8 இலும் அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்;
3. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும். இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம். கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று. கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு ஆடி மாதம் 02 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. | கோப்பாய் வைத்திய அதிகாரி அலுவலக ஆலோசனைக் கூடம் விஸ்தரித்தல் (கட்டம் 11) | ரூபா 15.000 | ரூபா 500/- |

5. இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாண அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்;

பிரதம பொறியியலாளர் அலுவலகம்
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்;

பிரதம பொறியியலாளர்
யாழ்ப்பாணம்.

(C/2119)


## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன மாதம்15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி. வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகிறது.

### சங்கானை

| | |
|---|---|
| 189379 ஏ | 189380 ஏ |
| 189516 ஏ | 189516 பி |
| 190514 ஏ | 190514 பி |
| 190514 சி | 191781 ஏ |
| 191781 பி | 192244 ஏ |
| 192244 பி | 192244 சி |
| 192381 ஏ | 192381 பி |
| 192381 சி | 193578 ஏ |
| 193579 ஏ | 193579 பி |
| 193607 ஏ | 193660 ஏ |
| 193660 பி | 193678 ஏ |
| 193789 ஏ | 193789 பி |
| 194207 ஏ | 194252 ஏ |
| 194252 பி | 194258 ஏ |
| 194322 ஏ | 194409 ஏ |
| 194462 ஏ | 194893 ஏ |
| 194918 ஏ | 194924 ஏ |
| 194983 ஏ | 194933 பி |
| 194983 சி | 195044 ஏ |
| 195079 ஏ | 195900 ஏ |
| 195900 பி | 196976 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 191027 ஏ | 192402 ஏ |
| 192452 ஏ | 192454 ஏ |
| 193585 ஏ | 193782 ஏ |
| 194194 பி | 194247 ஏ |
| 194247 பி | 194294 ஏ |
| 191451 ஏ | 194474 ஏ |
| 194474 பி | 194474 சி |
| 194952 ஏ | 194956 ஏ |
| 194956 பி | 194990 ஏ |
| 194992 ஏ | 195018 ஏ |
| 195043 ஏ | 195879 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179298 ஏ | 179298 பி |
| 179298 சி | 183148 ஏ |
| 183148 பி | 183244 ஏ |
| 183244 பி | 183244 சி |
| 184926 ஏ | 184966 ஏ |
| 184966 பி | 186981 ஏ |
| 188632 ஏ | 188632 பி |
| 190464 ஏ | 190573 ஏ |
| 190716 ஏ | 191785 ஏ |
| 191785 பி | 191826 ஏ |
| 191826 பி | 191826 சி |
| 191903 ஏ | 191915 ஏ |
| 191915 பி | 191931 ஏ |
| 191931 பி | 191931 சி |
| 191931 டி | 192193 ஏ |
| 192310 ஏ | 192353 ஏ |
| 19247 ஏ | |
| 193543 ஏ | 193544 ஏ |
| 193544 பி | 193651 ஏ |
| 193551 பி | 193598 ஏ |
| 193598 பி | 193659 ஏ |

| | |
|---|---|
| 193699 ஏ | 153699 பி |
| 194197 ஏ | 194198 ஏ |
| 194209 ஏ | 194209 பி |
| 194209 சி | 194314 ஏ |
| 194314 பி | 194371 ஏ |
| 194393 பி | 194390 ஏ |
| 194415 ஏ | 194515 பி |
| 194415 சி | 194416 ஏ |
| 194868 ஏ | 194886 ஏ |
| 194886 பி | 196885 சி |
| 194931 ஏ | 194353 ஏ |
| 194989 ஏ | 194998 ஏ |
| 194998 பி | 195001 ஏ |
| 194013 ஏ | 195014 ஏ |
| 195014 பி | 195016 ஏ |
| 195028 ஏ | 195028 பி |
| 195031 ஏ | 195031 பி |
| 195125 ஏ | 194137 ஏ |
| 195137 பி | 195426 ஏ |
| 195843 ஏ | 195843 பி |
| 195925 ஏ | 197189 ஏ |
| 197189 பி | 198675 ஏ |
| 198706 ஏ | 198707 ஏ |
| 198707 பி | 195990 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 189461 ஏ | 199461 பி |
| 192379 ஏ | 192468 ஏ |
| 193649 ஏ | 193649 பி |
| 194196 ஏ | 194196 பி |
| 194262 ஏ | 194262 பி |
| 194262 சி | 194321 ஏ |
| 194440 ஏ | 194443 ஏ |
| 194755 ஏ | 194855 பி |
| 194856 ஏ | 194866 ஏ |
| 194913 ஏ | 196143 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 161930 ஏ | 161930 பி |
| 161930 சி | 185009 ஏ |
| 189454 ஏ | 189455 ஏ |
| 190696 ஏ | 190696 பி |
| 191818 ஏ | 191818 பி |
| 191820 ஏ | 191820 பி |
| 191820 சி | 191958 ஏ |
| 191979 ஏ | 191979 பி |
| 191979 சி | 191987 ஏ |
| 191987 பி | 192193 பி |
| 192322 ஏ | 192322 பி |
| 192442 ஏ | 193495 ஏ |
| 193523 ஏ | 193523 பி |
| 193532 ஏ | 193532 பி |
| 193532 சி | 193535 ஏ |
| 193535 பி | 193595 ஏ |
| 193595 பி | 193680 ஏ |
| 193782 பி | 193878 பி |
| 194200 ஏ | 194233 ஏ |
| 194264 ஏ | 194294 பி |
| 194341 ஏ | 194414 ஏ |
| 194417 ஏ | 194480 ஏ |
| 194878 ஏ | 194930 ஏ |
| 194980 ஏ | 194980 பி |
| 194980 சி | 195117 ஏ |
| 198052 ஏ | 198768 ஏ |
| 198768 பி | 198768 சி |

# மதுப்போத்தலுடன் திரியும் யாழ். மாணவர்கள்

# சாட்டிக் கடலில் அம்மணமாக நின்று ஆடினர்!

## வெறியாட்டம் வீதிகளிலும் தொடருகிறது

குருக்ஷேத்திரம்

விதுரன்

யாழ்ப்பாணக் கலாசாரம், கந்தபுராண கலாசாரம் என்பது பண்டிதமணியின்வாக்கு. பண்டிதமணி வாழ்ந்தகாலத்தில் அவரின் பார்வையில் யாழ்ப்பாண மண்ணில் எங்கும் தெய்வீகக் காட்சிகள், புராண படனங்கள், அற்புதமானநீதிமுறைகள். இதனால் யாழ்ப்பாணக்கலாசாரம்கந்தபுராண கலாசாரம் என்ற முடிவுக்கு பண்டிதமணி வந்திருந்தார்.

ஆனால் இன்று நிலைமை அடியோடு புரண்டுவிட்டது. எங்கும் அட்டகாசம், அடாவடித்தனம், களவு, கசிப்பு என பாதகங்களின் பட்டியல் நீண்டு செல்கிறது.

குறிப்பாக பாடசாலை மாணவர்களின் நடவடிக்கைகள் பலரையும் வாயில் கை வைக்குமளவிற்கு இட்டுச் செல்கிறது. பெற்றோர், ஆசிரியர்களின் வழிகாட்டல்களெல்லாம் கட்டுமீறி-சமயக் கல்வி தோல்வி கண்ட நிலையில் மாணவர்களின் நடத்தைகள் பெரும் பிறழ்வு கண்டுள்ளது.

நகரில் உள்ள பிரபல்யமான கல்லூரி மாணவர்கள் இப்போது குழுக்களாகச் சேர்ந்து அட்டகாசங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

க. பொ. த. சாதாரண தர மாணவர்கள், உயர்தர மாணவர்கள் மது பாவனையில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். சிகரெட் குடித்தல் சர்வசாதாரணமாகிவிட்டது.

நகரப் பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள இப்பிறழ்வு நெறிஒழுக்கமான ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிவுள்ள கிராமப் புறப் பாடசாலை மாணவர்களிடையேயும் பரவி விடுமோ என்ற அச்சம் கல்வியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

**சுற்றுலாவும் வெறியாட்டமும்**

மாணவர்களின் கல்விச் சுற்றுலா இடம் பெறும் காலம் இது. தமது கல்விச் செயற்பாட்டுக்கு மேலும் தூண்டுவதாக - துணைபோவதாக இருப்பதற்கே கல்விச்சுற்றுலா இடம் பெறுவதுவழக்கம், ஆசிரியர்களின் துணையோடுமேற்கொள்ளும் கல்விச் சுற்றுலாக்கள், நல்ல முறையில் நடைபெறுகிறது. ஆசிரியர்களின் துணையுடன் இடம் பெறும் சுற்றுலாவுக்குப் பெற்றோரின் அனுமதியும் உண்டு.

ஆனால்கடந்தசனிக்கிழமை [16.06.2001] இடம் பெற்ற மாணவர்களின் சுற்றுலா பார்ப்போர்பலரையும்அதிர்ச்சிக்கும், வேதனைக்கும் ஆளாக்கியது.

யாழ். நகர்ப்பகுதியிலுள்ள பிரபல்யமானஓர்கல்லூரியின் உயர் வகுப்பு மாணவர்கள் ஒரு மினிபஸ்மூலம் வேலணை சாட்டிப் பகுதிக்குச் சென்றனர் தமது சுற்றுலாவுக்கு ஆசிரியர்களும் வருவதாகக் கூறியே பெற்றோர்களின் அனுமதியையும் பெற்றிருந்தனர். ஆனால் இச் சுற்றுலாப் பற்றி கல்லூரி நிர்வாகத்திற்கோ ஆசிரியர்களுக்கோ எதுவும் தெரியாது.

மினிபஸ்ஸில் சென்ற அந்த மாணவர்கள் கூடவே மதுப் போத்தல்கள், சிகரெட் பைக்கற்றுக்களையும் ஏராளமாகத் தம்மோடு எடுத்துச் சென்றனர்.

சாட்டி வெள்ளக்கடற்கரையில் இறங்கிய அவர்கள் கூட்டாக இருந்து மதுப்போத்தல்களைக்காலியாக்கும்பணியை கச்சிதமாக மேற்கொண்டனர்.

நிறைவெறி, பிரமாதமான பிரேக்டான்ஸ் அதனிலும் அநேக மாணவர்கள் தமது உடம்பிலிருக்கும் சிறு ஆடையைத் தவிர வேறெந்த ஆடைக்கும் அனுமதி வழங்கவில்லையாம். சிகரெட்புகை ஒருபுறம், மாணவர்கள் சிகரெட் குடிப்பதைப் பொறுக்க முடியாத காற்று பலமாக வீசி சிகரெட்டை விரைவாகச் சாம்பலாக்கியது. காற்றுக்கே பொறுக்க முடியாத அந்தக்காட்சியை இதே உயர்வகுப்பு மாணவர்கள் கீழ்வகுப்பில் கடற்கரைக் காட்சிஎழுதியகட்டுரைகளும், சித்திரங்களும் இப்போது தோல்விகண்டுவிட்டது.

என்ன செய்யமுடியும் மாணவர்கள் மதுவுக்கு அடிமையானால் முதலில் வீட்டில் பொய் உரைப்பர். பின் பாடசாலையில், தொடர்ந்து கல்வியல் துஷ்பிரயோகம் இப்படியே தரமுயர்வு நடக்கும்! பெற்றுவளர்த்து கற்பனைக் கனவுகளோடு இருக்கும் பெற்றோர்களுக்கு நம் மாணவர்கள் கொடுக்கப்போகும் பரிசு எதுவாக இருக்குமென ஒருகணம் எண்ணினால் கண்களின் ஓரங்களீரமாகின்றன.

**நிர்வாணக்குளியலும் சப்பல் அடியும்**

இளைஞர் கோஷ்டியொன்று கடந்த 09-06-2001 அன்றும் சாட்டிக்கு சுற்றுலாச் சென்றனர்.

சுற்றுலா வழக்கப்படி அபிஷேக ஆராதனை எல்லாம் நடந்தது. அன்றைய தினம் பெண்கள் அடங்கிய குழுவொன்றும் சாட்டிக்குச் சென்று நீராடிக்கொண்டிருந்தனர்.

அச்சமயம் இளைஞர்கோஷ்டியில் நான்கு, ஐந்து இளைஞர்கள் முழு நிர்வாணமாக நின்று நீராடினார்கள். மது வெறியின் மமதை அப்படிச் செய்தது. இதனை தூரஇடத்திலிருந்த பைனாகுலர் மூலம் அவதானித்த கடற்படையினர் அங்கு விரைந்து வந்து வேலியிலிருந்த மட்டையைப் பிடுங்கி நிர்வாணமாக நின்ற இளைஞர்களுக்கு சப்பல் அடி போட்டனர்.

இனிமேலும் பெண்கள் குளிக்கும் போது இப்படிநடக்காதீர்கள் என்று எச்சரிக்கை செய்தார்கள்.

எப்படியிருக்கிறதுநிலைமை, நம் தமிழ்ப் பண்பாடு- இளம் சமூகம் எங்கே செல்கிறது பார்த்தீர்களா?

## முன்பள்ளி ஆசிரியர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியைகளுக்கான கலந்துரையாடல்கள் எதுவும் சமீபகாலம்வரை நடைபெறவில்லையென சம்பந்தப் பட்டோர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக இத்தகைய கலந்துரையாடல்கள் நடைபெறுவது வழக்கம் என்றும் சமீபகாலமாக கலந்துரையாடல்கள் நடைபெறாமை நமக்கு பெரும் கவலையை தருவதாகவும் தெரிவித்துள்ளனர் (க)

## நேர்முக பரீட்சை

[சங்கானை]

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 14 ஆம் திகதி வலி. மேற்குப்பிரதேச சபையில் இடம் பெற்றது.

நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-123)

## 'சுக மஞ்சரி' சஞ்சிகை வெளியீடு

(கல்வயல்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமுதாய மருத்துவத் துறையின் இலவச வெளியீடான ''சுகமஞ்சரி'' காலாண்டு சஞ்சிகையின் ஐப்பசி 2000 க்கான இதழ் (மலர் 4- மஞ்சரி 4) பல அரிய மருத்துவக் குறிப்புகள் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இந்த மலர் உளநலசிறப்பு மலராக உள நோய், உளவியல், தேசிய மருந்தேற்றல் அட்டவணை, கேள்வி பதில் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. (க)

## குடிசன கணக்கெடுப்பு படிவங்கள் மீள ஒப்படைப்பு

[ஈச்சமோட்டை]

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் நடைபெறவிருந்த குடிசன, தொகை கணக்கெடுப்புக்கான படிவங்கள் பதிவுகள் மேற்கொள்ளப்படாமலேயே அவ்வப் பிரதேச செயலகங்களில் திருப்பிஒப்படைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணச் செயலகத்துக்கு அண்மையில் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு குடிசன மதிப்பீட்டை நடாத்த வேண்டாம் எனக் கோரி கடிதம் அனுப்பியதை தொடர்ந்தே இவ்வாறு படிவங்கள் மீள ஒப்படைக்கப் படுகின்றன.

$F_1$ படிவமும் பகுதிகளுக்குரிய வரை படத்தையும் உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கும் படி பிரதேச செயலகஅதிகாரிகளினால் அறிவுறுத்தப்பட்டதற்கமையவே ஒவ்வொரு கிராம சேவகர் மட்டத்திலும் கண்டங்களாகப் பிரித்து வழங்கப்பட்ட இப் படிவங்கள் மீள் கையளிப்பு செய்யப்படுகின்றன.

கடந்த 14 ஆம் திகதி நடைபெறவிருந்த கணக்கெடுப்பாளர்களுக்கான விளக்கப் பயிற்சி வகுப்பும் திடீரென இரத்துச் செய்யப்பட்டதாக பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. [க-09]

## புதையல் ஆசை காட்டி 10இலட்சம் பணம் அபேஸ்

### ஹபரணையில் சம்பவம்

(கொழும்பு)

செல்வந்தர் ஒருவரிடம் புதையல் ஆசை காட்டி பத்து லட்சம் ரூபா மோசடி செய்த சம்பவம் ஒன்று ஹபரணைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விக்கிரமசிங்க என்ற செல்வந்தரிடம் துரைராஜா நடராஜா என்பவர் மெதிரிகிரியவில் தங்கப் புதையல் ஒன்று தோண்டப்பட்டிருப்பதாகவும், பத்து லட்சம் ரூபா தந்தால் அதனைத் தருவதாகவும் கூறி, குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு ஏற்கனவே தயாராக நின்ற மோசடி நபரின் சகாக்கள் செல்வந்தரை தாக்கிவிட்டு பணத்துடன் தலைமறைவாகிவிட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக மெதிரிகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு மோசடிக்காரர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றுபவர்களும் இப்படித்தான் செயற்படுவார்கள் என மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (செ)

## தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

2001 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கான தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி முடிவுகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற பாடசாலைகளதும் மாணவர்களதும் விபரங்கள் வருமாறு;

**1 திறந்தபோட்டி**

**நடனம்-குழு**

யாழ். இராமநாதன் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**இசை நாடகம்**

இந்துமகளிர் கல்லூரி. இராமநாதன் கல்லூரி, கரம்பன் மகளிர் கல்லூரி.

**இசைக்குழு**

யூனியன் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், வட இந்துமகளிர் கல்லூரி;

**விவாதம்**

பரியோவான் கல்லூரி, கலாநிதி க. தியாகராசா மகாவித்தியாலயம் (காரை நகர்), உடுப்பிட்டி மகளிர் கல்லூரி;

**நாடகம்**

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம், பெரியபுலம் மகாவித்தியாலயம்;

**தமிழறிவு வினா விடை**

ஸ்கந்தவரோதயாச் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, கரவட்டி விக்னேஸ்வராக்கல்லூரி.

(3-ம் இடத்தில் கடைசி இரு பாடசாலைகள்)

**பிரிவு 1**

**பேச்சு**

து. வைஷ்ணவி (யாழ்ப்பாணக் கல்லூரி. தே. விதுர்ஷன் கொக்குவில் இந்துக் கல்லூரி). ஜெ. பிரியங்கா (நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்);

**இசையும் கதையும்**

சி. துளசி [நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை.) இ. கஜரூபி (அளவெட்டி த.க.பாடசாலை, செ.பபிதா (திருநெல்வேலி, தா. துஷாந்தி(நெடுந்தீவு).

**ஆக்கத்திறன்**

பி பிரதீபா (வல்வை சிவகுருவித்தியாலயம்), ம. அழகராசா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ஸ்ரீ. தீபிகா (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்.)

**பாவோதல்**

ம. துளசி (யாழ்பாணக் கல்லூரி), சுதர்சனா சிவசக்தி (நீர்வேலி), க. கோபிகா (நெல்லியடி மெ மி.க. கலவன் பாடசாலை.)

**நடனம் தனி**

நா. நிரோதிகா (பெரியபுலம் மகா வித்தியாலயம், சி. சிவரதினி (ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்), பா. மதுரா (தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலம்);

**வாசிப்பு**

க. மாலினி (வடமராட்சி இந்து மகளிர்), யோ. கார்த்திகா (மகாஜனாக்கல்லூரி). மு. சூரியா (நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி கனிஸ்ர வித்தியாலயம்);

**பிரிவு 11**

**ஆக்கத்திறன் வெளிப்பாடு கதை கூறல்**

ந. பிரியா (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), கு. யதுர்சன் (பரியோவான் கல்லூரி த. பிரதீபா (சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம்);

**இசை தனி**

செ. பவனுஜா(வேம்படிமகளிர் கல்லூரி.

யோ. மனோகரன் (சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்), சி. சர்மளா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

**இசை-தனி**

யோ. வினோதா (வேம்படி மகளிர் கல்லூரி), க. குலானி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வை. துவாரகா (வட. இந்து மகளிர் கல்லூரி)

**பேச்சு**

ஜெ. யூட்பிரதீபன் (புனித கென்றியரசர் கல்லூரி), ச. கார்த்திகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), தெ. முகுந்தன் (யாழ். மத்திய கல்லூரி)

**வாசிப்பு**

ப.சுமதா(தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்)நி. சிந்துஜன் யூடின் (புனித சம்பத்திரிசியார்கல்லூரி) ஜெ. சர்மிளா (சாவகச்சேரி)க.அமலா (கலாநிதி க.தியாகராசா மகாவித்தியாலயம்-காரை நகர்); (க-15)

# செய்தித் துளிகள்

## திருமலையில் பாதுகாப்பு தீவிரம்

(திருமலை)

திருமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாகப்பலப் படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்துகிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலை படைத்தளத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவதை அடுத்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு தீவிரரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (வ)

## 93 நோயாளர்கள் வவுனியா வந்தனர்

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து 93 நோயாளர்கள கடந்தவாரம் சிகிச்சைபெறுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு வந்துள்ளதாகவும் சிகிச்சை பெற்ற 63 நோயாளர்கள் வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு சென்றுள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. [ந- 9]

## மீனவர் இளைப்பாற்று மண்டபம்

(புலோலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் சுமார் 1, 25000 ரூபாசெலவில் மீனவர் இளைப்பாற்று மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இம் மீனவர் இளைப்பாற்று மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனின் கோரிக்கையையடுத்தே இம் மீனவர் இளைப்பாற்று மண்டபம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (க-52)

## அளவெட்டியில் மின்சாரம் இல்லை

[யாழ்ப்பாணம்]

மக்கள் மீளக்குடியமர்ந்து பல வருடங்களாகியும் அளவெட்டிப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது குறித்து பலருடன் தொடர்பு கொண்டும், பயன் ஏதும் இல்லை என அப்பகுதி மக்கள தெரிவிக்கின்றனர். [உ-104]

## மீள நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் பழைய மருத்துவ விடுதித் தொகுதி தற்போது மீள நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது. [உ-'04]

## வீதி திருத்தம்

(கல்வயல)

நீண்டகாலமாகக் குன்றுங் குழியுமாக காணப்பட்ட கிலவர் ஒழுங்கை தார் ஊற்றப் பட்டு திருத்தஞ் செய்யப் பட்டுள்ளதனால் இவ்வொழுங்கையால் பயணஞ் செய்வோரின் சிரமங்கள நீங்கியுள்ளது. (செ-111)

## சங்காபிஷேகம

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

பி. ப. 4.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் சுவாமி புன்னை விருட்சப் பூந்தொட்டியில் வெளி வீதி உலா வரும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (செ)

## சமுர்த்தி அலுவலகம் திறப்பு

[புலோலி]

வல்வெட்டித் துறையில் சமுர்த்தி வலய அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதையடுத்து பருத்தித் துறையில் வெகு விரைவில் சமுர்த்தி வலய அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-52)

## அக்கரைப்பற்றில் புதிய நடைமுறை

(கொழும்பு)

அக்கரைப்பற்றுப் பகுதி மக்கள் வெளிமாவட்டங்களுக்குப்பயணம் மேற்கொள்ளும்போது தமது விபரங்களை கிராமசேவையாளர் ஊடாக 3 நாட்களுக்கு முன்னர் பொலிஸாருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென புதியநிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந் நடைமுறை தமிழ் மக்களின் பாதுகாப்புக்கருதியும் இவர்கள் வெளியிடங்களில் கைது செய்யப்படும் போது அவர்களது விடுதலைக்கு உதவும் வகையிலும் நடைமுறைப் படுத்தப்படுவதாக அக்கரைப்பற்று பொலிஸ் பொறுப்பதிகாரி யு. எல். எம்.மொஹைதீன் தெரிவித்தார். (உ-5)

## கிணறுகள் அமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை, பொற்பதி, மணற்காடு ஆகிய கிராமங்களில் மூன்று திறந்த கிணறுகளை அமைக்கவுள்ளது.

இக் கிணறுகள் அமைப்பதற்கென 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (க-52)

## பாலியல், கொலை குற்றவாளிகளுக்கு பிணை இல்லை

(கொழும்பு)

மனிதப்படுகொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவு ஆகிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பிணையில் செல்வதை நிறுத்துவதற்கு நீதி அமைச்சு நடவடிக்கைஎடுத்து வருகிறது.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதையிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளன. 26 ஆம் திகதி காலை இரதோற்சவமும் 27 ஆம்திகதி தீர்த்தோற்சவமும்நடைபெறவுள்ளன. (செ-104)

---

### வவுனியாகல்வியியற் கல்லூரியில்

# டிப்ளோமா முடித்த இருவருக்கு அடிப்படை கல்வித்தகைமை இல்லை

(வவுனியா)

வவுனியா தேசியக்கல்வியியல் கல்லூரியில் மூன்று வருட டிப்ளோமா பயிற்சிநெறியைமுடித்துவிட்டு வெளியேறிய மாணவர்கள் இருவருக்கு அடிப்படைத் தகைமை இல்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூன்றுவருட டிப்ளோமா பயிற்சியை முடித்துவிட்டு வெளியேறிய மாணவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றபோதே அடிப்படைத்தகுதி இல்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது பயிற்சிபெற்றுவரும் மாணவர்களின் அடிப்படைத் தகைமைகளை கல்லூரிநிர்வாகம் பரிசீலனை செய்தபோது மேலும் ஏழுமாணவர்களுக்கு அடிப்படைத்தகுதி இல்லாமலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (வ)

---

# இராசி பலன்

18.6.2001

(ஆனி 4, திங்கள்)

துவாதசி மு.இ 9 42 வரை

பரணி மு.இ 8.11 வரை

இராகுகாலம் 7 23- 8 53

நல்ல நேரம் 11.53 - 1.23

சித்தம்.

**மேடம்**
சென்ற இடத்தில் சிறப்பு, தேகநலம், போசன சுகம், நண்பர்கள் உதவி.

**இடபம்**
காரியக்கேடு, கோபப்படுதல், வீண் செலவு, நித்திரைக் குறைவு.

**மிதுனம்**
பெருமையான நிகழ்வு, குடும்ப சுகம், பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி.

**கடகம்**
அதிகாரம், சுபசெய்தி, பணியாளர் உதவி, காரியம் கைகூடும்.

**சிங்கம்**
காரியநன்மை, மனப்பயம், பிரயாணம், தந்தை வழி உறவு.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, கொடுக்கல் வாங்கல்பிணக்கு, முயற்சி தடங்கல், பிரயாண பயம்.

**துலாம்**
சுவாரஸ்யம், பொருள் சேர்க்கை, பிரயாணம், காரிய ஜெயம்.

**விருச்சிகம்**
புதிய தொழில் முயற்சி, காரிய நன்மை, சந்தோச நிலை, ஆரோக்கியம்.

**தனுசு**
கீர்த்தி, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், நிலைக்கேடு.

**மகரம்**
உடல் சோர்வு, தன்னம்பிக்கைக் குறைவு, விரும்பாத உறவு, காரிய தாமதம்.

**கும்பம்**
தனவரவு, அந்நியர் சந்திப்பு காரியநன்மை, சந்தோசமான நிகழ்வு.

**மீனம்**
மாதர் நட்பு, களஸ்திர சுகம், விதண்டா வாதம், காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

---

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# அலுவலகம் முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவை முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் அதியுயர் அரசியல் பீடத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இவ்வார்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சுமார் இருநூற்றைம்பது பேர் இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (செ)

# தங்கக் காப்பு திருட்டு திருடன் மர்ம மறைவு

## அவல நிலையில் சிறுமி

[புலோலி]

வீட்டின் முன் உள்ள வீதியில் நின்ற சிறுமி ஒருத்தியின் தங்கக் காப்பை வீதியால் வந்த திருடனொருவன் திருடிக் கொண்டு சென்றதாகப் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப் பட்டுள்ளது.

பருத்தித்துறை மணல் ஒழுங்கையைச் சேர்ந்த டேவிட் டிலக்சனா [வயது 4] என்பவரது தங்கக் காப்பே திருடப் பட்டதாகும்.

இச் சிறுமியுடன் சவரிமுத்து சுகந்தியும் வீதியில் நின்றபோது பகல் வேளையில் இச் சிறுமியுடன் கதை கொடுத்த திருடன் காப்பை உருவிக் கொண்டோடியதாகவும் சிறுமிகள் குழறியழுததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-52)

# புதிய நூற்றாண்டில் முதலாவதுசூரிய கிரகணம்

(கொழும்பு)

புதிய நூற்றாண்டின் முதலாவது சூரிய கிரகணம் எதிர் வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை நிகழவுள்ளதாக வானியல் நிபுணர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சாம்பியா நாட்டில் இக்கிரகண நிகழ்வை மிகத் தெளிவாக அவதானிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மிலேனியத்தின் முதலாவதான இந்தச் சூரிய கிரகணம் குறித்து ஆய்வு செய்வதற்கு உலக நாடுகளிலிருந்து ஆய்வாளர்கள் சாம்பியாவுக்குச் சென்ற வண்ணமுள்ளனர்.

இந்த நிகழ்வைக் கண்டு களிப்பதற்காக ஏராளமான உல்லாசப் பிரயாணிகளும் சாம்பியாவுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

மொசாம்பிக், நமீபியா, அங்கோலா, மடகஸ்கார் ஆகிய நாடுகளிலும் இக்கிரகண நிகழ்வை அவதானிக்க முடியும் என வானியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (க-3)

# உழவு இயந்திரங்களால் பெரும் அவல நிலைமை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதான வீதியில் செல்லும் உழவு இயந்திரங்களால் அவ்வீதியால் செல்லும் பொது மக்கள், ஆசிரியர்கள் பெரும் அவல நிலையை எதிர்நோக்குவதாக சம்பந்தப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே குண்டும் குழியுமாக உள்ள இவ் வீதியால் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களைத் தாம் எதிர்நோக்கி வந்ததாகவும் உழவு இயந்திரங்களின் பயணம் இச் சிக்கலை மேலும் அதிகரிப்பதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர், வல்லிபுரக் கோயில் பகுதி இராணுவத் தளபதி, வடமராட்சி உழவு இயந்திர உரிமையாளர் சங்கம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதககவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# மந்திகையில் விபத்து வயோதிபர் காயம்

(மந்திகை)

மந்திகைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்- சைக்கிள் விபத்திற்குள்ளானதில் காயமடைந்த வயோதிபர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சம்பவத்தில் மொட்டையன் செல்லையா (வயது 80) என்பவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (க-23)

## இன்று ஒரு தகவல்

# குறுக்குவழியில் பயனில்லை

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தந்தை அவனைப் படிக்க வைக்கப் பல வகையில் முயன்றார். ஆனால் அவனோ படிப்பில் சிறிதும் நாட்டமின்றி இருந்தான். இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன. அவன் கல்வியறிவில்லாதவனாகவே வளர்ந்தான். இதனால் ஊர் மக்களும் உற்றார் உறவினர்களும் அவனைக் கேலியாகப் பேசினார்கள். இதைக் கேட்டு மனம் உடைந்த அவன் 'கடுந்தவம் புரிந்தாவது கல்விஅறிவு பெற்றுத் திரும்புவேன்' என்று உறுதிசெய்தான்.

காட்டிற்குச் சென்ற அவன் அங்கே தவத்தில் ஆழ்ந்தான். அருகே கங்கையாறு ஓடிக்கொண்டிருந்தது. அவனுக்கு நல்லறிவை உணர்த்த வேண்டுமென்று நினைத்தான் இந்திரன். ஒரு முதிய அந்தணன் வடிவம் கொண்டு அவனிருக்கும் இடத்திற்கு அருகே அமர்ந்தான் தன் கையால் மண்ணை அள்ளி அள்ளிக் கங்கையாற்றில் போட்டுக்கொண்டிருந்தான். இதைக் கண்ட அவன் 'ஐயா! எதற்காக இப்படி மண்ணை அள்ளி அள்ளிப் போடுகின்றீர்'? என்று கேட்டான்.

அதற்கு அந்தணன் 'மனிதர்களும், விலங்குகளும் ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் கட்டுவதற்காக மண்ணைப் போட்டுக் கொண்டிருக்றேன்' என்று பதில் தந்தான். 'வெறும் மணலால் கங்கையில் பாலம் கட்ட முடியுமா? நீங்கள் போடும் மண்ணையெல்லாம் தண்ணீர் அடித்துக் கொண்டு சென்றிருக்குமே முதியவரான நீர் அறிவில்லாத இந்தச் செயலைச் செய்யலாமா? இனியாவது ஏதாவது பயனுள்ள செயலில் ஈடுபடுங்கள்' என்றான் அவன்.

அந்தணன் உண்மையான இந்திரன் ஆனான். 'நீயும் என்னைப் போலப் பயனற்ற செயல் தானே செய்தாய். எழுத்துக்களைத் தெரிந்து கொள்ளாமலும், பாடம் படிக்காமலும், ஆசிரியரிடம் கேட்காமலும் வெறும் தவம் இருப்பதால் அறிவு கிடைக்காது. இன்னும் காலம் கடந்து விடவில்லை. நல்லஆசிரியரை நாடி முனைப்புடன் கல்வி கற்க முயற்சி செய் நீ சிறந்த அறிஞனாவாய்' என்று அவனை நோக்கிக் கூறிமறைந்தார்.

பேராசிரியர் எ. சோதி

# பல்கலை விரிவுரையாளரின் மூன்று மாத சம்பள நிலுவை வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை

## செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் மூன்று மாத கால சம்பள நிலுவைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக, பல்கலைக் கழக விரிவுரையாளர் சம்மேளன செயலாளர் கலாநிதி சீ. என். டி. தெமட்டவெவ தெரிவித்துள்ளார்.

விரிவுரையாளர்களுக்கு சம்பள நிலுவை வழங்கப்படாதது குறித்து கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநாட்டிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரியின் அனுமதி கிடைத்ததும் இச் சம்பள நிலுவைகள் வழங்கப்படும் என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (செ)

## பண்டாரநாயக்க விமான நிலையத்தில் நேற்று குழப்பம்

(கொழும்பு)

பண்டாரநாயக்கசர்வதேச விமான நிலையத்தில் நேற்றுச் சாலை அமைதியற்ற நிலை காணப்பட்டதாகச் செய்தி ஊடகங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புக் கடமையிலிருந்த விமானப்படை அதிகாரி ஒருவர்சுங்கத்திணைக்கள அதிகாரி ஒருவரைத்தடுத்து வைத்திருந்தமையினாலேயே இக் குழப்ப நிலை நிலவியது.

சுங்க அதிகாரியை விடுவிக்க வேண்டும் எனக்கோரி, சுங்க அதிகாரிகள் அனைவரும் தமது கடமைகளை இடைநிறுத்தியிருந்தார்கள்.

இதனால் விமானப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது எனவிமானநிலையப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (செ)

## மேலதிக மாத்திரைகளை உண்டவர் மரணம்

(மந்திகை)

அதிக மாத்திரைகளை உண்ட மனநோயாளி ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

கடந்த சனி மாலை நடைபெற்ற இச் சம்பவத்தில் சரணவாய் அண்ணா சிலையடியைச் சேர்ந்த கதிரன் பொன்னையா என்பவரே மரணமானவராவார்.

ஒரு மாதத்திற்குரிய மாத்திரைகளை உண்டமையால் மரணமானதாகத்தெரிவக்கப் படுகிறது. (க-23)

## பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை தரம் II இல் கடமையாற்றிய திருமதி சாந்தி நாவுக்கரசன் தரம் I ற்கு அமைச்சரவையினால் பதவியுயர்த்தப் பட்டுள்ளார் (செ)

## பாசமுடன் அன்பர்களைப் பாலித் தருள் புரிவாய்!

ஓம் என்ற எழுத்தின் உருவாய் அமைந்தவரே!
சோமன்தன் நிறங்கொண்டு சோதி வடிவானவரே!
நாமிந்த உலகினிலே நலமுடனே வாழ்வதற்கு
ஏமப்புணையெனவே உம்மைப் பிடித்தோமே!

கோண்டாவில் கிழக்கில் கோபுரமும் கோயிலுமாய்
ஆண்டு கொண்டிருக்கின்ற அரசடி வாழ் ஐங்கரனே!
ஈண்டுன்றன் கொடி ஏற எம் வாழ்வும் விடிவு பெற
வேண்டும் வரமளித்து, வினை தீர்த்து அருள்வாயே!

ஆசி மடத்தருகில் அரசமர நிழலிலே
வீசு புகழுடனே வீற்றிருக்கும் ஐங்கரரே!
பாசமுடன் அன்பர்களைப் பாலித் தருள் புரிவாய்!
ஈசன் திருமகனே! எமையாளும் கணபதியே!

மதிவாணர்

(கோண்டாவில்- கிழக்கு ஆசிமடம், அரசடிவிநாயகர் ஆலயக் கொடியேற்றத்தை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகிறது)

## தவறி வீழ்ந்து படுகாயம்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை துறைமுகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வேலை செய்து கொண்டிருந்த சமயம் தவறி வீழ்ந்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில்கடற்படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்லன்தாழ்வு காரை நகரைச் சேர்ந்த கந்தையா ஜெகநாதன் (வயது-32) என்பவரே காயமடைந்தவராவார். [உ-10-6]

## திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீலியம்பனைப் பகுதியில் திருட்டுகள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பட்டப்பகலிலேயே ஆட்களில்லாத வீடுகளிலிருந்து மரங்கள், கதவுகள், ஓடுகள் என்பன திருடிச் செல்லப்படுகின்றன. [உ-104]

## சங்காபிஷேகம்

[வட்டுக்கோட்டை]

அராலி ஆவரம் பிட்டி முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று காலை 8. 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து பூந்தண்டிகையில் அம்பாளின் வீதியுலாவும் இரவு கலைநிகழ்ச்சிகளும்இடம்பெறவுள்ளது. [செ-24]

## மஹோற்சவம்

[கோப்பாய்]

கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் வரை நடைபெறும்.

எதிர் வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன. [உ-97]

## திருத்தப்படாத வீதிகள்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மத்தொனி சந்தை வீதியிலிருந்து சண்டில் குளம் வரையான வீதி நீண்ட காலமாகத் திருத்தப் படாது காணப் படுகிறது. [உ-23]

□ □ □ □

(உடுவில்)

உடுவில் வீதியையும் மானிப்பாய் வீதியையும் இணைக்கின்ற இலந்தையடி வீதி கடந்த பல வருடங்களாகச் செப்பனிடப் படாத காரணத்தினால் மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (உ-129)

## ஜே.வி.பி.யினர் மீது தாக்கு அம்பாறையில் சம்பவம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஜே வி.பி. யினர் துண்டுப் பிரசுரம் விநியோகித்த போது தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தை இன அடிப்படையாக பிரிப்பதை ஜே வி பியினர் வெறுக்கின்றனர் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது

அரசாங்கக் கட்சியின் எதிர்க் கட்சி எனக் கருதப்படும் ஒருவர் அந்த துண்டுப் பிரசுரங்களை பறித் தெடுத்ததாக ஜே.வி.பி யின் தகவல் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது

அட்டாளைச் சேனைப் பகுதியில் தமது கட்சியைத் தாக்கிய நபர் தான் இவ்வாறு நடந்து கொண்டதாக ஜே. வி.பி யினர் மேலும் தெரிவித்தனர். [ச-7[

### தமிழ் மொழியில் கருமமாற்ற

## கொழும்பு மாநகர சபையில் பெரும் முயற்சியாம்

[கொழும்பு]

கொழும்பு மாநகர சபைப் பகுதியில் தமிழ் மொழியில் கருமமாற்றுவதற்கு அரச கரும ஆணைக்குழு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது விடயம் தொடர்பாக அரசியல் யாப்பிற்கமைவாக ஜனாதிபதி சந்திரிகா, பிரகடனம் ஒன்றை வெளியிட்டிருந்தார். ஆனால் இந்தத் திட்டம் உரிய முறையில் செயல்படுத்தப்படவில்லை என்று அரச கரும ஆணைக்குழுவுக்கு தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து அரச கரும ஆணைக்குழுவின் தலைவர் டி. குணசேகர தீவிர நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். [க-7]

## இரு இளைஞர் கைது கதிர்காமத்தில் சம்பவம்

(கொழும்பு)

கதிர்காமப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் இரு மாணவிகளை கடத்த முற்பட்டதாகக் கூறப்படும் இரு இளைஞர்களை கதிர்காமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கைதான இருவரும் பன்னிப்பிட்டியவைச் சேர்ந்தவர்கள என்றும் நேற்று முன்தினம் இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (க-3)

## சாரதி அனுமதிப் பத்திரம் பரிசோதிப்பதை பிற்போட நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

'வாகன சாரதி அனுமதிப் பத்திரம் முழுமையாகக் கிடைக்கும் வரை யாழ். நகரப் பகுதி தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் பொலிஸாரினால் சாரதிஅனுமதிப்பத்திரம் பரிசோதிக்கப படுவதை தற்காலிகமாக பிற்போட நடவடிக்கை எடுக்கப் படும்'

இவ்வாறு யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் கொக்குவில் மக்கள் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் வாகனச் சாரதிஅனுமதிபத்திரம் பெற்றுக் கொள்ளல் தொடர்பான கலந்துரையாடலில் தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி. ஐ. கொளஞரே தலைமையில் இடம் பெற்ற மேற்படி கூட்டத்தில் மேலதிகஅரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்; வாகன அனுமதிப்பத்திரம் அவசியம் அனைவரும் வைத்திருக்க வேண்டும.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கொழும்பில் இருந்து இங்குவர பயப்படுகின்றார்கள. இதற்கு எமது செயலக அதிகாரிகளின் அசமந்தப் போக்கு என கருதக் கூடாது.

அடுத்த மாதம 15ஆம்திகதி இது தொடர்பான அதிகாரி யாழ். வரவுள்ளதால் அந்தச் சந்தர்ப்பத்தை வாகன சாரதிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நேற்றைய கலந்துரையாடலில் யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ். ஐ. உடுவல்ல மற்றும் மினிபஸ், ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள் எனப் பலர் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளையும் எடுத்துக் கூறினர். (க-15)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ உலகை வலம் வந்த வயதான பாட்டி

தமது நாட்டைக் கூட இன்னும் சுத்திப் பார்க்காமல் எத்தனையோ பேர் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் வயதான பாட்டி ஒருவர் தன்னந் தனியாக உலகைச் சுத்தி வந்திருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா? அவர் எப்படி உலகைச் சுற்றினார் என்று கேட்டால் இன்னும் வியப்படைவீர்கள்.

அறுபது வயதான அந்த பிரிட்டிஷ் பாட்டி ஜெனிஃபர் முர்ரே ஹெலிகொப்ரர் ஒன்றில் ஏறி தனி மனிதராகவே உலகை வலம் வந்து சாதனை படைத்துள்ளார் இவருடைய ''Solo around the globle in a Helicopter'' சாதனைக்கு மொததம 90 நாட்கள் பிடித்ததாம்.

### ★ ரோபோ உற்பத்தியில் ஜப்பான் முதலிடம்

இயந்திர மனிதன் என அழைக்கப்படும் ரோபோக்கள் இன்று அகழ்வு, ஆராய்ச்சி உட்பட பல துறைகளில் மனிதனுக்கு உதவி வருகின்றன.

இதில் முதலாவது ரோபோவின் பிறப்பு ஜப்பானில் தான நிகழ்ந்துள்ளது. ஆம்! 1931 ஆம் ஆண்டு முதன் முதலாக ஒரு இயந்திர மனிதனை உற்பத்தி செய்த நாடு ஜப்பான் ஆகும். அந்த முதலாவது இயந்திர மனிதனின் பெயா ''காகுடென்சோகு'' என்பது தான் ஆக 70 ஆண்டுகளுக்கு முன்னரே ரோபோ உற்பத்திக்கு வித்திட்ட ஜப்பான் இன்றும் கூட அவ் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

-அவதானி-

# பங்களாதேஷில் குண்டு வெடிப்பு

# 22 பேர் பலி; 100 பேர் காயம்

### கடந்த 30 வருட வரலாற்றில் மிகப் பெரும் சம்பவம்

(டாக்கா)

பங்களாதேஷின் ஆளும் கட்சியின் அலுவலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 22 பேர் பலியானதுடன் 100 ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

டாக்காவிற்கு அருகிலுள்ள நகர் ஒன்றில் அமைந்துள்ள அலுவலகத்திலே இரவு 10 மணியளவில் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸமீம. அஸ்மான்போன்றவர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தியபோதே இக்குண்டு வெடித்துள்ளது

இக்குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக பங்களாதேஷ் அரசவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை விசாரணை முடிவடையும் வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பங்களாதேஷின் கடந்த 30 ஆண்டுகால வரலாற்றில் இதுவே மிகப்பெரிய குண்டு வெடிப்பு என்று அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

(க-7)

# பஸ் வண்டி நீருக்குள் பாய்ந்ததில் 12 பேர் பலி; 40 பேர் படுகாயம்

### பங்களாதேஷில் சம்பவம்

பங்காளதேஷின் தலைநகருக்கு அண்மையில் நேற்று முன்தினம் பஸ் வண்டி ஒன்று பாலத்துடன் மோதி நீர் வாய்க்காலுக்குள் வீழ்ந்ததில் 12 பேர் ஸ்தலத்தில் பலியானதுடன் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த 40பேரில் 15பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விபத்துக்குள்ளான பஸ் வண்டியையும், மற்றும் காயமடைந்தவர்கள், பலியானவர்கள் அனைவரையும் நீர் வாய்க்காலில் 15 அடி ஆழமான பள்ளத்திலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [க-07]

# சீனாவில் பெருவெள்ளம் இடம்பெயரும்குடும்பங்கள்

சீனாவில் கடந்த புதன் கிழமை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் ஐவர் பலியாகியுள்ளனர். பதினையாயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

சீனாவில் தற்போதுபெய்து வரும் அடைமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் வாகனத்தில் பயணித்த வேளையிலேயே மேற்படி ஐவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு பலியாகியுள்ளனர்.

கடந்த மே மாதம் முதல் நேற்று முன்தினம்வரை வெள்ளப் பெருக்குக் காரணமாக சீனாவில் மொத்தம் 66 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# குஜராத்தில் வெள்ள அபாயம் ஆயிரக்கணக்கானோர்இடர்பெயர்வு

### மூன்றுவருட வரட்சியின் பின் தொடர் மழை

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதால் ஆயிரக் கணக்கான மக்கள் பாதுகாப்புக் கரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

குஜராத்தில் கடந்த மூன்று வருட வரட்சியின் பின் தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வாரம் மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவினால் ஏறத்தாழ 9 பேர் பலியாகியுள்ளனர். கட்டடங்களும் இடிபாடுகளுக்குள்ளானது.

கடந்த மாதம் இடம்பெற்ற பூகம்பத்தால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியதும் ஏற்கனவே தெரிந்ததே. (க-7)

# சோர்வு நிலையில் ஆப்கானிஸ்தான் மக்கள்

(காபூல்)

ஆப்கானிஸ் தானில் இடம் பெற்றுவரும் யுத்தம் காரணமாக மக்கள் சோர்வு நிலையை அடைந்துள்ளனர். என்றும் அமெரிக்க ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்க ஆய்வாளர்கள் 5 ஆயிரம் ஆப்கானிஸ்தானியர்களை ஆய்வு செய்ததில் இம்முடிவுகிடைத்துள்ளது.

பெரும்பாலான மக்கள் சமாதானத்தையே எதிர்பார்ப்பதாகவும் ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. [உ-7]

# டைட்டானிக் கப்பலில் இருந்து மீண்டவர் மரணம்

(ரோம்)

உலகப் புகழ் பெற்ற ''டைட்டானிக்'' கப்பல் கடலினுள் அமிழ்ந்த போது உயிருடன் மீட்கப்பட்டவர்களுள் ஒருவரான அன்ரோனியோ மார்டினெலி கடந்த செவ்வாய்க்கிழமை மரணமடைந்துள்ளார். (உ-3)

# கொலம்பியாவில் கார் குண்டு வெடிப்பு 16 பேர் படுகாயம்

(பொஹோரா)

கொலம்பியாவில் கடந்த வெள்ளி நடைபெற்ற கார்க் குண்டு வெடிப்பில் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களில் 6 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாகியுள்ளதாக கொலம்பிய வைத்தியவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 6 மாதங்களில் அடிக்கடி இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களில் இது வரை 12 பேர் கொல்லப்பட்டதுடன், 250 ற்கும் மேலானோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# துப்பாக்கி வேட்டிற்கு 12 வயது சிறுவன் பலி

(ஜெருசலேம்)

காஸாப்பகுதியில் உள்ள ராபா மாவட்டத்தில் பலஸ்தீன நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 வயது சிறுவன் பலியாகியதுடன் மேலும் 3பேர்படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலியப்படைமுகாமை நோக்கி இப்பலஸ்தீன நபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை யடுத்து இதனை தடுத்து நிறுத்த முற்பட்ட மக்களின் பக்கம் அந்நபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, இஸ்ரேலிய படை முகாம் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும் தமது தரப்பில் இருந்து எதிர்த் தாக்குதல் ஏதும் நடத்தவில்லை என இஸ்ரேலியப்படைகள் தெரிவித்துள்ளன. (க-7)

# கொலைகாரர் ஒருவர் மரண தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்

(வாஷிங்டன்)

1998 ஆம் ஆண்டு கென்யாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் குண்டுவைத்து தகர்த்து இருநூற்றி பதின் மூன்றுபேர் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த ஒருவர் மரண தண்டனையிலிருந்து தப்பித்துள்ளார்.

மொஹமட்ரபீக் இத்தாஹுட் அல் இஸ்ரானிக் என்ற சவூதி அரேபியாவைச் சேர்ந்தவரே இவ்வாறு மரண தண்டனையிலிருந்து தப்பித்தவராவார்.

பல்வேறு குண்டு வெடிப்புக்களுடனும தொடர்புடைய இவரை நியூயோர்க் நீதிமன்றம் விசாரணை செய்து ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

இவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் எனப் பலராலும் எதிர்க்கப்பட்ட போதும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (செ)

# கொங்கோ யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவரும் பேச்சுவார்த்தை ஒத்திவைப்பதாக அறிவிப்பு

(பிரேஸவில்)

கொங்கோ யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் கொங்கோ ஜனாதிபதி யோசப்கபிலாவுக்கும் உகண்டா ஜனாதிபதி சொவேரி முசேபினிக்குமிடையில் நடைபெறவிருந்த முதலாவது சந்திப்பு காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அமைதி நிலையை நாட்டில் கொண்டு வர வேண்டுமென்று இரண்டு தலைவர்களும் இன்று சந்திக்கவிருந்தனர்.

இவர்களது இச் சந்திப்பு தன்சானியாவில் இடம்பெறவிருந்ததாகவும் அந் நாட்டு அதிகாரிகள் மத்தியஸ்தம் வகிக்கவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்காவின் மூன்றாவது பெரியநாடானகொங்கோவில் யுத்தம் காரணமாக பெருமளவு மக்கள் அமைதியிழந்து காணப்படுவதாகவும் பல் வேறுபட்ட தொற்று நோய்கள் தோன்றியுள்ளதாகவும் பல நூற்றுக் கணக்கான மக்கள் பலியானதாகவும் தெரிய வருகிறது.

கொங்கோ முன்னாள் ஜனாதிபதி லோறன் ஸ்கபீலா சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து நாட்டின் ஜனாதிபதியாக பொறுப் பேற்ற அவரது மகன் யோசப்கபீலா சமாதான முயற்சியை முன்னெடுத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் 1998 ஆம் ஆண்டு உகண்டாவும் ருவாண்டாவும் கிழக்கு கொங்கோப் பகுதியை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-7)

> வியவற்க எஞ்ஞான்றும் தன்னை
> நயவற்க நன்றிபயவா வினை
>
> குறள்

## வலம்புரி

### காலம் கடந்த ஞானம்

அரச திணைக்களங்களில் குறிப்பிட்ட நிபுணத்துவ சேவை தவிர்ந்த ஏனைய சேவைகளில் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில்லை என பொது நிர்வாக உள்நாட்டலுவலகள் அமைச்சர் றிச்சார்ட் பத்திரனா அறிவித்துள்ளார்.

அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள் சேவையில் இருப்பதால் சேவையிலுள்ள ஏனையவர்களுக்கு பதவி உயர்வோ அல்லது அவர்கள் தமது நிர்வாகத் திறனை வெளிப்படுத்துவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. இதனால் மனித மூலதனத்தின் உச்ச பயனைக் குறித்த திணைக்களம் பெறமுடியாமல் போகிறது.

நிபுணத்துவம்-தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் தவிர, ஏனைய சேவைகள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படமுடியும். அதற்கான ஆளணியும் திணைக்களங்களில் உண்டு. அப்படியிருந்தும் அறுபது கடந்தவர்கள் உயர் கதிரைகளை அலங்கரித்துக் கொண்டிருப்பதால், ஏனையவர்களுக்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுகிறது. எப்படியும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அறுபது கடந்தவர்கள் கதிரைகளைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள்.

இதனால் நிர்வாகச் செயற்பாடுகள் கூட மந்தமாகவேயுள்ளது. பதவி உயர்வு கிடைக்க வேண்டியவருக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்காவிட்டால், அது நிர்வாக முகாமைத்துவத்தை சீர்குலைக்கும்.

இந்நிலையில் இவற்றை சீர்படுத்தி திணைக்கள நிர்வாகத்தில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதை அரசு என்று நிறுத்துகிறதோ அன்று தான் மக்களுக்கு விடிவு கிடைக்கும்.

குறிப்பாக . வடக்குக் கிழக்கு மாகாணசபையில் அனேகமான கதிரைகள் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களாலேயே நிரப்பப்படுகிறது. இது தமிழ் மக்களின் சாபக்கேடு எனலாம். வடக்கு கிழக்கு மாகாணசபைக்குக் கடிதம் எழுதினால் அதற்கான பதில் அனுப்பும் முறை அங்கு இல்லை. இப்படியான நிலைகளுக்கு சேவையில் ஓர் சலிப்புத் தன்மையிலுள்ள அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் உயர்கதிரையில் இருப்பதும் ஓர் காரணமாகும்

# தெய்வீகமான இயற்கையை வெற்றி கொள்ளும்

# செயற்கை சாதனங்களும், அனர்த்தங்களும்

திருமதி
சரோஜினி கல்யாணசுந்தரேசன்

இயற்கை, செயற்கை என்று கூறப்படும் அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து போகாத, பொருந்தாத, சந்திக்காத இரு துருவங்கள் போன்றவை. இயற்கை தெய்வீக சக்திக்குச் சான்று பகர்கின்றது. செயற்கை தெய்வீக சக்திக்குச் சவால் விட முனைகின்றது. இயற்கையில் காணப்படும் மாசு மறுவற்ற இன்பத்தினை செயற்கையான எப்பொருளும் வழங்கமாட்டா என்பதனை எவரும் மறுக்க இயலாது.

சூரியன் கொடுக்கும் ஒளியினை எத்தனை மின்குமிழ்கள் கொண்டும் தோற்றுவிக்க வியலாது. தாவர நிழல்கள் வழங்கும் குளிர்மையை செயற்கைக் குளிரூட்டும் சாதனங்கள் வழங்க மாட்டா. ஒரு மனித உடம்பினது இயற்கை அவயவங்கள் உடம்புக்கு வழங்கும் ஒத்துழைப்பினையும் உபயோகத்தினையும் செயற்கை உறுப்புக்கள் கொடுக்க மாட்டா, என்பது தான் யதார்த்தம். இயற்கை தெய்வீகமானது, அடக்கமானது, அமைதியைக் கொடுப்பது. செயற்கை ஆடம்பரமானது, மன அமைதியைக் கெடுப்பது.

### பெறுமதி பெரிது

இயற்கையானது விலை கொடுத்து வாங்கத் தேவை இல்லாத பொருள். இலவசமாகக் கிடைப்பது. இயற்கை இலவசமாகக் கிடைக்கும் பொருளாதலினால் அதனது பெறுமதியினை ஒருவரும் உணர்வதில்லை. இலவசமாகக் கிடைக்கும் பொருள்களை நாம் மதிக்கத் தவறி விடுகின்றோம். அப்பொருளிற்கு ஒரு பங்கம் நேரிடும் பொழுது தான், அதனது பெறுமதியினை உணர்ந்து வருந்துகின்றோம். பற்களைப் பாதுகாக்கும் முறையினை நன்றாகத் தெரிந்து கொண்ட நாம் அதனை உதாசீனம் செய்து விட்டு, பற்களிற் சிலவற்றினை இழந்த பின் செயற்கைப் பற்களைப் பொருத்தி அதனுடன் உபத்திரவப்படும் பொழுது தான், இயற்கைப் பற்களின் பெறுமதியினை உணர்ந்து வருந்துகிறோம். காலம் கடந்து வருந்துவதில் யாது பயன்?

### சுற்றுலா

இயற்கைக் காட்சிகள் கொடுக்கக் கூடிய இன்பத்தினை செயற்கைக் காட்சிகள் கொடுக்கத் தவறி விடுகின்றன. இயற்கைக் காட்சிகளின் வசீகரத் தன்மையினை நாம் கிடைத்தற்கரிய பொருளாகக் கணிப்பதில்லை. எமது நாட்டின் கண்ணே பார்த்து அனுபவிக்கக் கூடிய இயற்கைக் காட்சிகள் எண்ணற்றவை. நாம் அனுபவிக்க விரும்பாத, அதனைப் பார்ப்பது வீண் நேரம் எனக் கருதும் காட்சிகளையும் வனப்பினையும் ரசித்து அனுபவிப்பதற்கென, செயற்கையின் கோரம் தாண்டவம் ஆடும் இடங்களிலிருந்து மேல்நாட்டவர்கள் சுற்றுலா மேற்கொள்கின்றனர். ஆனால் வனப்பு மிகு இயற்கைக் காட்சிகள் நிரம்பிய இடங்களிலிருந்து செயற்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்கெனவும் ஒரு கூட்டம் புறப்படத்தான் செய்கின்றது. வினோதங்கள் வேடிக்கைகள் இன்பம் பயப்பன என்று நம்பித் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வது மட்டுமல்லாமல் அவ்வாறான காட்சிகளை ரசிப்பது தான் நாகரிகம் என்று நம்புகின்றனர்.

### கலையும் மருந்தும்

இயற்கைக் காட்சிகள் மருந்தன்னவை. தீராநோய் தீர்த்தருளும் தன்மை வாய்ந்தவை. புற்று நோயைக் குணமாக்கச் செயற்கைக் கதிர்களை உபயோகிக்கின்றனர். அதிகாலை நான்கு மணியளவில் எழுந்து வெளியில் உலாவும் போது சூரியனது ஊதா கலந்த கதிர்கள் எமது உடம்புக்கு கிடைக்கின்றன. அவை எமது தேகத்தை ஊடுருவி எமது உடம்பில் மறைந்திருக்கும் புற்றுநோய்க் கலங்களை இலகுவாக அகற்றுகின்றன. இயற்கை வனப்பு மிக்க சூழல்கள் மனநோயாளருக்கு மன அமைதியையும் சாந்தியையும் கொடுப்பனவாகவும் விளங்குகின்றன. சுய சிந்தனையைத் தூண்ட வல்லன. கடற்காற்று பலவருத்தங்களைக் குணமாக்குகின்றது.

இயற்கை அழகில் காணப்படும் அமைதியும் வசீகரமுமே கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளன. அதன் தனித்துவத்தினை அனுபவிக்கும் போது தோன்றும் உணர்ச்சிப் பெருவாகமே காவியங்களாகவும், கவிகளாகவும் உருவெடுத்துள்ளன. வீசுந் தென்றலும், குளிர்ந்த நிலவும், காற்றில் அசைந்தாடும் பூங்கொடியும், மாலைச் சூரியனும், கொந்தளிக்கும் கடலும், உயர்ந்த மலைகளும், பள்ளத் தாக்கின் அமைதியும் ஒரு கலைப்படைப்பாளிக்கு எத்தனை கதைகளைக் சொல்லுகின்றன.

### ஆத்மஞானம்

மேலும் இயற்கைக் காட்சிகளில் வியாபித்திருக்கும் தெய்வீகம் எமக்கு ஆத்மீக ஞானத்தை உதிக்கச் செய்கின்றது. எமது வாழ்வு அநித்தியம், என்றோ ஒரு நாள் நாம் இயற்கையுடன் சங்கமித்து மறக்கப்பட்ட பொருளாகி விடுவோம் என்பது தான் முதல் உதிக்கும் ஞானம். இயற்கைப் படைப்புக்களில் தொக்கி நிற்கும் புரியாத மர்மம், ஆதி அந்தமில்லாத் தன்மை எமது அகக் கண்ணுக்கு, 'நான்' 'எனது' என்பவை எல்லாம் அர்த்தமற்றவை எனப் புலப்படுத்துகின்றது. நாம் வாழ்வில் மேற்கொண்டுள்ள இலட்சியங்கள், நோக்கங்கள், பூசல்கள் யாவும் அர்த்தமற்றவையாகவும் அற்ப விடயங்களாகவும், தோன்றி எமது அறியாமையை நினைத்து வெட்கங் கொள்ள வைக்கின்றது. மானிடப் பிறவிக்குரிய குறுகிய வாழ்நாளில் நாம் சுயநலம் விடுத்து, இருதயச் சுத்தியுடன் தெய்வீகம் நிறைந்த வாழ்வை நடத்தி எம்மை உலகுக்குப் பயனுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஒரு திட சங்கற்பம் மனதில் தோன்றுகின்றது.

### அனர்த்தக் காட்சிகள்

எழில்மிகு ஐவகை நிலக் காட்சிகளும் அதாவது மருதம், பாலை, முல்லை, குறிஞ்சி, நெய்தல் என்பவை அள்ளிப் பொழியும் அழகும் வனப்பும், விசாலமாகிக் கொண்டே செல்லும் பிரபஞ்சத்தின், மர்மம் பொதிந்த கோலமும் வழங்கக் கூடிய இன்பத்தினை விட, இக்கால கட்டத்தில் போர் அனர்த்தங்கள் வழங்கும் காட்சிகளே மக்களைப் பெரிதும் ஈர்க்கும் காட்சிகளாகத் தென்படுகின்றன.

குண்டுகளைப் பொழியும் குண்டுவீச்சு விமானங்களைப் பார்க்கவும், ஒரு கணத்திலே கற்குவியலாக மாறி நிற்கும் வானளாவிய மாடமாளிகை கூட கோபுரங்களைப் பார்க்கவும் மக்கள் சிட்டாகப் பறக்கின்றனர். உடல்சிதறி மரணித்துக்கிடக்கும் மானிட வர்க்கத்தின் காட்சி மக்களைக் காந்தம் போல் கவர்கின்றது. இக்காட்சிகளைக் கண்டு களிக்க மக்கள் முண்டியடித்துக் கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மனிதனுக்கு வாழ்க்கையில் தோன்றக் கூடிய அவல நிலைக் காட்சிகள் இன்னுமொரு வகையான கவர்ச்சியைக் கொடுக்கின்றன. சூறையாடப்பட்ட விற்பனை நிலையங்களும் வீடுகளும், உடமைகளை இழந்த உரிமையாளனின் கவலை தோய்ந்த முகம், அலைகடல் வெளியே வீசியுள்ள வள்ளப் பயணிகளின் மரணித்த உடல்கள் இவைகளைக் கண்டு களிக்க அங்கே இன்னுமொரு வகையான கூட்டம் அலை மோதுகின்றது. இறைவன் மேலுள்ள தாளாத பக்தியினால் பறவைக் காவடி எடுக்கும் பக்தனை வேடிக்கைப் பொருளாக்கித் தனது குழந்தைக்கு உபகதையாகச் சிலாகித்துச் சொல்லும் பாவ ஆத்மாவைப்பற்றி என்ன சொல்வது?

மனிதர்களைச் சில செயற்கை வருத்தங்கள் ஆட்டிப்படைக்கின்றன. ஆற்றாமை தாளாமை பொறாமை இல்லாமை, திருப்திப்படாமை என்னும் பல உருவங்களில் அவ் வருத்தங்கள் காணப்படுகின்றன. உடையவன் ஒன்றும் இல்லாதவனாக மாறும் காட்சிகள் போன்றவை இத்தகைய செயற்கை வருத்தங்களை ஆற்றும் அருமருந்தாகத் தொழிற்படுகின்றன போலத் தெரிகின்றது. இயற்கைக் காட்சிகள் வழங்க முடியாத இன்பத்தினை இச் செயற்கைக் காட்சிகவை வழங்கி விடுகின்றன.

# யாழ். குடாநாட்டில் தொடரும் திருட்டுக்கள்

# பொலிஸ் பொறுப்பதிகாரி அவசர வேண்டுகோள்

## நகைக்கடை உரிமையாளர்கள் கவனமாகச் செயற்படவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் திருட்டுக்கள் இன்று என்றும் இல்லாதவாறு நடந்து வருகிறது. வீடுகள், பொது ஸ்தாபனங்கள் என்ற வேறுபாடு இன்றி களவுகள் தொடர்கின்றன. களவாடப்படும் நகைகள் பலவும் குடா நாட்டு நகைக்கடை உரிமையாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றன என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி. என். குடா ஹெட்டி தெரிவித்தார்.

நகைக் கடை உரிமையாளர்கள் மற்றும் நகை அடைவு பிடிக்கும் நிலைய உரிமையாளர்களுடன் யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த 16 ஆம் திகதி காலை நடத்திய சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

எந்த விதமான நகைகளையும் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்த அவர்.

அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நகைகள் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் எந்த விதமான பணக்கொடுப்பனவும் இன்றி நகைகள் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் 396 வது சட்ட விதிப்படி இவ்வாறு களவுப் பொருட்கள் விற்பனை செய்ய உடன்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட நபருக்கு மூன்று வருட கால சிறைத் தண்டனை வழங்க சட்டத்தில் இடம் உண்டு எனவும் தெரிவித்தார்.

குடா நாட்டில் பல்வேறு துன்பங்களின் மத்தியில் வாழ்க்கை நடத்தும் ஏழ்மை மக்களின் பொருட்களே இவ்வாறு களவாடப்படுகின்றன.

எனவே இக் களவினை தடுப்பதற்கு யாழ். குடா நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும், நகைக்கடை உரிமையாளர்களையும் ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

இத் திருட்டை தடுக்கும் முகமாக நகைக் கடைகளில், கொள்வனவு செய்யப்படும் நகைகளின் உரிமையாளர்களின் அடையாள அட்டை தற்காலிக சொந்த முகவரி மற்றும் அப்பொருள் எவ்வாறு அவரது கைக்கு கிடைத்தது என்பது பற்றிய விபரம் பெற்றபின் குறித்த நகையை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும், கொள்வனவு செய்யப் பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

# உதட்டளவில் சமாதானத்தை உச்சரிக்கும் அரசை பதவியிலிருந்து விலக்கவேண்டும்

## விநாயகமூர்த்தி எம். பி. தெரிவிப்பு

(திருமலை)

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமென்பதை ஜனாதிபதிசந்திரிகா இதயசுத்தியுடன் கூறிவருவதாக இருந்தால் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக செயற்பட்டு வரும் விடுதலைப்புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தையில ஈடுபட வேண்டுமென அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட எம்பியுமான அ.-விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

திருமதி சுபாஜினி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில்; நாம் இந்த அர-சை பதவியிலிருந்து விலக்க வேண்டும்:

சமாதானத்தை உதட்டளவில் பேசிக்கொண்டு யுத்தத்-தை தீவிரப்படுத்துவதிலே-யே சந்திரிகா அரசு செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் சமாதானத்திற்கான கதவுகளை திறந்திருப்பதாக பிரதமர் கூறிவருவது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு தந்திரோபாயமாகும்;

இக்கட்டானசூழ் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் பொது ஜன ஐக்கியமுன்னணி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வகுக்கும் ஏமாற்று வித்தைக்-கு தமிழ்மக்கள் பலியாகி விடக்கூடாது. இந்நிலையில் தமிழ் எம்பிக்கள் ஒன்றிணைந்து தமது பலமான நிலையை அரசுக்கு உணர்த்தவேண்டும் என்றும் கூறினார்;

இக் கருத்தரங்கில் தமிழ் காங்கிரஸின் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் திருமலை தமிழ்க் காங்ரஸ் அமைப்பாளர் எஸ். சிவகுருநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்; (வ)

## ☆ இ. நி. சே. போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லை 35 ஆக உயர்த்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

இலங்கை நிர்வாக சேவைக்கான வயதெல்லை 35 ஆக வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துவருவதாக ஈ.பி.டி.பியின் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

இலங்கைநிர்வாகசேவைக்கு ஆட் சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்குரிய வயது எல்லையை 30 ஆகவரையறுத்துள்ளதால், ஏற்கனவே இப்பரீட்சைக்கு தோற்றி அதிக புள்ளிகள் பெற்றபோதிலும் நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் மேலும் பாதிக்கப்படும் நிலைமைஏற்பட்டுள்ளதாகவும்,

எனவே இதனைத்தவிர்க்க வயதெல்லையை 35 ஆக அதிகரிக்குமாறும் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை விடுத்திருந்ததும் தெரிந்ததே; (ந)

## சுதந்திரஆணைக்குழுஇருக்குமாயின் பொ.ஐ.மு. பதவிக்கு வரமுடியாது

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

முஸ்லிம் காங்கிரசுக்கும் அரசுக்குமிடையேயான உறவுகள் நியாயமான அளவுக்கு கேள்விக்குறியாகியுள்ளன என்பதை அதன் தலைவர் ரவுப்ஹக்கீம் உறுதி செய்துள்ளார்.

அமைச்சர் மஹிபால ஹேரத்திற்கெதிரான ஐ தே கவின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதில்தெளிவான முடிவுடன் தாம் இருப்பதாகவும்;

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் இரு கட்சிகளும் தம்முடன் பேச்சுக்களை வைத்துக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்:

பிரதம நீதியரசருக்கும் தமக்கும் பிரச்சினையேதும் கிடையாதென்றும் ஆனால் பாராளுமன்றதிற்கு மேலாண்மையுள்ளதென்றும் தெரிவித்த அமைச்சர் ஹக்கீம் கடந்த தேர்தலின் போது சுதந்திர ஆணைக்குழுக்கள் இயங்கியிருந்தால் பொ. ஐ. முன்னணி பதவிக்கு வந்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்: [ந]

### இன்று பிரார்த்தனை

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல்களுக்கு முடிவுகட்டும் வகையிலான பிரார்த்தனைகள் இன்று நடைபெறவுள்ளது;

கட்சிகளின் உட்பூசல் நிலையைப் போக்கி, கட்சியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைக்கு நிவாரணம் தேடுவதாகவும் இப் பிரார்த்தனை அமையவுள்ளது; (வ)

## கிழக்கு பல்கலை சுற்றிவளைப்பு ரெலோ எம். பி செல்வம் கண்டித்து அறிக்கை!

கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய செயலானது கல்விச் சமூகத்தை அச்சுறுத்தும் ஒருநடவடிக்கையாக அமைந்துள்ளது என்று ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்:

அவர் விடுத்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப்பல்கலைக் கழகத்தில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையானது தமிழர் கல்விச் சமூகத்திற்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் புலி உறுப்பினர்கள் நுழைந்துள்ளனர் என்றும் அதனால்தான் பல்கலைக்கழகம் சுற்றிவளைக்கப்பட்டது என்றும் படையினர் உபவேந்தருக்கு அறிவித்திருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் செல்வம் அடைக்கலநாதன் அந்தஅறிக்கையில் தெரிவித்துள்ளார்; (வ)

## பேருந்து தடம் புரண்டது 19 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 19 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்:

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கொழும்பு மத்திய பேருந்திலிருந்து புறப்பட்ட பேருந்தே நேற்றுக் காலை 6.00 மணிக்கு தடம் புரண்டது:

இவ்விபத்தில் படுகாயமடைந்தவர்களில் குழந்தை, ஒன்று உட்பட 5 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ-7)

## கொழும்பு நகரில் வாகனங்களை கவனிக்க விசேட பொலிஸ் குழு

கொழும்பு நகரின்பாதுகாப்-பை பலப்படுத்தவும் வாகன நெரிசலையும் குறைப்பதற்கு நகரிற்குள் வரும் தகுதியற்ற வாகனங்களை போக்குவரத்து சேவையிலிருந்து அகற்றுவதற்கு இன்று முதல் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆறாயிரம் வாகனங்கள் நாளாந்தம் கொழும்பு நகரிற்குள்வருவதாகவும் இவற்றை கவனிப்பதற்கு விசேட பொலிஸ் குழு ஈடுபடுத்தப் படவுள்ளதாகவும் தேசிய பொலிஸ் அதிகாரி அல்பிரட் விஜயவர்த்தனா அறிவித்துள்ளார்; [ந-5]

## டிப்ளோமா பரீட்சை பிற்போடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா இறுதியாண்டு மாணவர்களுக்கு எதிர் வரும் 30 ஆம் திகதி நடைபெற இருந்த பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் இந்துக்கல்லூரி நிலைய இணைப்பாளர் திருமதி க.விவேகநாதன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் ஜூலை 14 ஆம் 15 ஆம் திகதிகளில் நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [ந]

## யாழ் குடாநாட்டில்--

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பற்றுச் சீட்டுக்களை பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறும் குறித்த பொருள் தொடர்பாக இரு வாரத்துக்குள் எந்தவிதமான களவு தொடர்பாக முறைப்பாடு எதுவும் பொலிஸ் நிலையத்தில் இருந்து கடை உரிமையாளர்களுக்கு. கிடைக்காது விட்டால் அந் நகையினை உருக்குவதற்கு கடை உரிமையாளர்களுக்கு உரிமை உண்டு எனவும அறிவித்தார்.

இடம் பெயர்ந்து வாழும் மக்கள் நகையினை விற்பனை செய்வதாயின் குறித்த கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பத்திரத்தினை கொள்வனவு செய்யப்படும் கடை உரிமையாளர்களுக்கு காண்பித்து விற்பனை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் பொலிஸ் நிலைய அதிகாரி குடா நாட்டு மக்களின் தேவைகள் தொடர்பான பிரச்சினைகளை கேட்டு அறிந்ததுடன் தம்மை தொடர்பு கொள்வதாயின் (2221) (2222) என்னும் இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டார். (க-10-06)


**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

அர்ஜுன், அபிதா

பிரகாஷ்ராஜ்

நடித்த

**வானவில்**

தினசரி [ரீல்ஸ்]

11-00, 2-30 [பு. நே]

(3222)


## நூலகம் திறப்பு

(சங்கானை)

இளவாலை அன்னமார் சனசமூக நிலையம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு கட்டட திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது.

'றான்' அமைப்பு இதற்கான நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வே.அ. ஜோண்சன் பெரு முயற்சி எடுத்ததன் காரணமாக இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-123)

## கைக்குண்டு ஒப்படைப்பு

கொக்குவில் பகுதியில் வீட்டுத்தோட்டத்தை துப்பரவுசெய்த விவசாயிஒருவர் அங்குகாணப்பட்டகைக்குண்டொன்றை மீட்டதாகவும்.

அவ்வாறுமீட்கப்பட்டகைக்குண்டை கொக்குவிலிலுள்ள இராணுவ முகாமில் ஒப்படைத்ததாகவும் பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்தசெய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## மன்னாரில் இரு சடலங்கள்

மடுவீதிக்கு அருகே கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு எல்லையை கடக்க முற்பட்டபோது சுட்டுக்கொல்லப்பட்டதாகத்தெரிவித்து மன்னார் வைத்தியசாலையில் இரண்டு சடலங்களைப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (ந-8)

## புலிகளின்...

டி.சிவராம்என்பவர்புளொட் அமைப்பின் முன்னாள் மத்தியகுழு உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இவரின் படமும் வெளியிடப்பட்டுள்ளது.

## பிரதம...

மறியல்போராட்டகாரர்களினால் கோசங்களை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்.

ஐக்கியதேசியக்கட்சியினால் கொண்டுவரப் படவுள்ள உத்தேச குற்றவியல்பிரேரணையைக்கண்டித்து சுலோகங்களையும் மறியல்போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (வ)

## புலிகள்...

பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கும் வசதியாக விடுதலைப்புலிகள் மீதானதடையைநீக்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சமாதானத்தீர்வு அவசியம் காணப்படவேண்டும், அதன் மூலமே கடந்த இருபது வருடங்களாக நடக்கும் கொடியயுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரமுடியும்

சமாதானப்பேச்சுவார்த்தை நடைபெறும் வகையில் புலிகளின்மீதான தடையைத் தற்காலிகமாக வேனும் நீக்குவது அவசியமென்று ஐக்கிய தேசியக்கட்சி கருதுவதாக அவர் குறிப்பிட்டார்;

இதேவேளை டிரோன் பெர்னாண்டோவின் இக் கருத்து ஐக்கிய தேசியக்கட்சியினதா? அல்லதுஅவரதுதனிப்பட்டகருத்தாஎன்பது தொடர்பாக கட்சி வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் அடிபடத்தொடங்கியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை கவிழ்ப்பதற்கான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவுக்கு டிரோன்பெர்னாண்டோவின் கருத்து பாதகமாக அமைந்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்; (வ)

## சபாநாயகர்...

இருதரப்பிலுமிருந்து ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் மேல் நீதிமன்றத்தின் உத்தரவை நிராகரிக்கும் விதத்திலும் பாரளுமன்றத்தின் தீர்மானங்களை மேல்நீதிமன்றம் தலையிட்டு தடுக்கமுடியாதென்றவகையிலும் தனது தீர்ப்பை சபாநாயகர் வழங்குவார் என்று நம்பப்படுகிறது இதனை தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும் சபாநாயகர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளின் பெயர்களை கேட்டறிவார். (ந)

இப்பத்திரிகை "வலம்புரி" அன்ஸோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.